# ★ வன்னியில் புலிகள் தாக்கு; 14 இராணுவம் பலி

விலை ரூபா 5-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 38 திருவள்ளுவர் ஆண்டு 2023 தை 09 இதழ் 344
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 23 — 01 — 1992

(வவுனியா)

வவுனியாவில் நேற்றுக் காலை விடுதலைப் புலிகள் மேற்கொண்ட இரு வேறு தாக்குதலில் 14 படையினர் கொல்லப்பட்டதுடன் பல நவீன ரக ஆயுதங்களும் புலிகளால் மீட்கப்பட்டன. நேற்றுக் காலை 7 மணியள [illegible]

(4-ம் பக்கம் பார்க்க)

## 5 சடலங்கள் மீட்பு

(வவுனியா)

கணேசபுரம் காவலரண் பகுதியில் புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் கொல்லப்பட்ட 10 படையினரில் ஐவரின் சடலங்களை புலிகள் மீட்டனர்.

(4-ம் பக்கம் பார்க்க)

## ஆயுதங்கள் மீட்பு

(வவுனியா)

இத்தாக்குதலில் கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள் வரு[illegible] ஏ. கே. எல். எம். ஜி ரக [illegible]

(4-ம் பக்கம் பார்க்க)

## அடுத்த மூன்று மாதத்துள் இனப்பிரச்னைக்கு தீர்வு

(கொழும்பு)

இனப் பிரச்னைக்கு அடுத்த மூன்று மாதங்களுக்குள் தீர்வு காணக்கூடியதான சூழ்நிலை உருவாகி வருவதாக அமைச் [illegible]

(4-ம் பக்கம் பார்க்க)

# சீனன்குடா குண்டுவெடிப்பால் விமானப்படை சீர்குலைந்தது

# இராணுவ நடவடிக்கை பாதிப்பு

## பல கோடி ரூபா சேதம்

(கொழும்பு)

சீனன்குடா விமானத்தளத்தில் இடம்பெற்ற குண்டுவெடிப்பையடுத்து ஏற்பட்ட மிகப் பெரும் அழிவால் விமானப்படை பெருமளவில் சீர்குலைந்துள்ளது. இதனால் இராணுவ நடவடிக்கை பாதிக்கப்படும் சூழ்நிலை எழுந்துள்ளது. இந்த அழிவு அரசுக்கு பெரும் நெருக்கடியை உருவாக்கியுள்ளதுடன் பல கோடி ரூபா சேதத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

திருகோணமலை சீனன்குடா விமானத்தளத்தில் நேற்று முன்தினம் நிகழ்ந்த வெடி விபத்தில் காரணமாக விமானப்படைக்கு சொந்தமான ஆயுதக்கிடங்கு சின்னா பின்னமடைந்து பல கோடி ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளது. விமானப் படை முகாமிலுள்ள ஏனைய கட்டிடங்கள், யுத்த தளபாடங்கள், சிறிய விமானங்கள் என்பன வற்றுக்கு பலத்த சேதமேற்பட்டுள்ளது.

## ஹெலி எரிந்து சாம்பர்

குண்டு வெடிப்பில் ஒரு ஹெலிகொப்டர் முற்றாக எரிந்து சாம்பரானது. இதற்கு அருகில் நின்ற மற்றும் இரு ஹெலிகொப்டர்கள் பலத்த சேதமடைந்துள்ளன. இவை இயங்கக் கூடிய நிலையிலுள்ளதா என்பது மிகவும் சந்தேகம் என 'ஏஜென்ஸி' செய்தி ஒன்று தெரிவித்தது.

## யுத்த விமானங்கள் நாசம்

இந்த வெடிவிபத்தால் 4 யுத்த விமானங்கள் மிக மோசமாக சேதமுற்று இயங்க முடியாத நிலையிலுள்ளன. மற்றும் இரு யுத்த விமானங்களும் சேதமடைந்துள்ளது. இவற்றின் இயக்க நிலை குறித்து விமானப் பொறியியலாளர்கள் ஆராய்ந்து வருகிறார்கள்.

## 20 கட்டடங்கள் தகர்ந்தன

விமானத் தளத்தில் இருபது கட்டடங்கள் முற்றாக இடிந்து தரைமட்டமாகியுள்ளன. கட்டட இடிபாடுகளுக்குள் அகப்பட்ட சடலங்களில் இரண்டு பொதுமக்களுடையது என்று அடையாளம் காணப்பட்டுள்ளது.

## 12 படையினரை காணவில்லை

நேற்று முன்தினம் அங்கு சென்ற விமானப்படை தளபதி ஏயர்வைஸ் மார்ஷல் டெறன்ஸ் குணவர்த்தன இந்த விபத்தை பற்றி விசாரணை செய்தார். கூட்டுப்படைத் தலைமையகத்தின் தளபதி ஜெனரல் ஹமில்டன் வனசிங்க, பாதுகாப்பு ராஜாங்க அமைச்சின் செயலாளர் ஏயர்சீவ் மார்ஷல் வால்டர் பெர்ணாண்டோ ஆகியோர் பிரதமருடன் சீனன்குடா சென்றிருந்தார்கள். விமானத் தள ஆயுதக்கிடங்குக்கு முன்பாக நின்ற பன்னிரண்டு விமானப்படையினர் உருத்தெரியாமல் பஸ்மீகரமாயினர். குண்டுவெடிப்பில் ஒன்பது. பத்து விமானப்படையினர் ஈடுபட்டிருந்ததாகவும் அவர்கள் உடல் சிதறி பலியானதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## முக்கிய ஆவணங்கள் அழிந்தன

அங்கிருந்த சகல கட்டிடங்களும் முற்றாக சேதமடைந்துள்ளன. சிறிய வெடி குண்டுடன் ஆரம்பித்த இந்த சம்பவம் காரணமாக ஒரு சில நிமிடங்களில் முழு ஆயுதக் கிடங்குகளும் வெடித்து சிதறின. களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்த குண்டுகள், சுடு படைக்கலங்கள், தோட்டாக்கள், விமானத்திலிருந்து ஏறியும் குண்டுகள் மற்றும் பெறுமதி மிக்க ஆவணங்கள் என்பனவும் முற்றாக அழிந்து விட்டன.

(4-ம் பக்கம் பார்க்க)

## மூன்று தமிழர் சுட்டுக்கொலை

(திருமலை)

திருமலை மாவட்டத்தில் சம்பூரில் படையினரின் அடாவடித்தனத்தில் நேற்று முன்தினம் 3 தமிழர் உயிரிழந்தனர். சம்பூரைச் சேர்ந்த இராசலிங்கம் ரவிநேசன், சிவகரி சிவமோகன், செல்லையா யோகேஸ்வரன் ஆகியோரே இராணுவத்தினரால் சுட்டுக் கொலைப்பட்டவர்களாவர்.

## தமிழ் அகதிகள் திருமலை வந்தனர்

(திருமலை)

இந்தியாவிலிருந்து கப்பலில் அழைத்து வரப்பட்ட தமிழ் அகதிகள் நேற்றுக்காலை 9-30 மணிக்கு திருமலை சீனன்குடா துறைமுகத்தில் பாதுகாப்பாக இறங்கியதாக இலங்கை அதிகாரிகள் தெரிவித்தனர். திருமலை வந்த அகதிகளை

(4-ம் பக்கம் பார்க்க)

## முப்படை தளபதிகள் அவசர மாநாடு

(கொழும்பு)

முப்படைத் தளபதிகளும் இன்று கொழும்பில் கூட்டுப் படைத் தலைமையகத்தில் கூடி தற்போதைய நிலைமை குறித்து ஆராயவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. ஜெனரல் ஹமில்டன் வனசிங்கவும் இம்மாநாட்டில் கலந்துகொள்வார். பாதுகாப்பு அமைச்சு இந்த அவசர சந்திப்பை ஒழுங்கு செய்துள்ளது. (இ)

## சர்வஜன வாக்கெடுப்பு ஒத்திவைப்பு

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு இணைப்பு தொடர்பான வாக்கெடுப்பு ஆகஸ்ட் மாதம் 28ம் திகதிவரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

(4-ம் பக்கம் பார்க்க)

## நாகராஜன் நேற்று ஜாமினில் விடுதலை

(சென்னை)

"தமிழக முன்னணி" [illegible] கைது செய்யப்பட்ட திரு ஆர். நாகராஜன் நேற்று ஜாமீனில் விடுதலை செய்யப்பட்டார். 'தடா' சட்டத்தின் கீழ் இவர் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் நீதிமன்றத்தில் ஆஜராக [illegible]

(4ம் பக்கம் பார்க்க)

